# பீல் பிராந்திய பாடசாலை மன்றத்தில் விசேட கல்வி
# (Special Education in the Peel District School Board):
# அடையாளப்படுத்தல், நிலையமர்த்தல் மற்றும் மீளாய்வு செயற்குழுக்கள்
# (Identification, Placement and Review Committees)
# ஐபீஆர்சீ (IPRC)

## பெற்றோர்களிற்கான ஒரு வழிகாட்டி

### அடையாளப்படுத்தல், நிலையமர்த்தல் மற்றும் மீளாய்வு செயற்குழு (Identification, Placement and Review Committee) என்பது என்ன?

வெவ்வேறு சிறுவர்கள் கற்பதும் விருத்தியடைவதும் வேறுபட்ட வேகங்களில் ஆகும். சில பிள்ளைகளிற்கு, வழக்கமான வகுப்பறை அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யாமல் இருக்கக்கூடும். பீல் பிராந்திய பாடசாலை மன்றமானது (Peel District School Board), பின்வரும் செயல்முறைகளை உள்ளடக்கிய ஒரு செயற்குழுவின் ஆதரவுடன், இந்த மாணவர்களுக்கு உதவுவதில் ஈடுபாடு கொண்டுள்ளது:

- விசேட கல்வி திட்டங்கள், ஆதரவு அல்லது/மற்றும் சேவைகள் அவசியப்படும் ஒவ்வொரு மாணவரையும் அடையாளப்படுத்துகின்றது.
- அவன் அல்லது அவளின் தேவைகளைப் பூர்த்திசெய்யும் ஒரு திட்டத்தில் அம்மாணவரை நிலையமர்த்துகின்றது.
- அம்மாணவர் எவ்வாறு விருத்தியடைகின்றார் என்பதை மீளாய்வு செய்கின்றது.

அடையாளப்படுத்தல், நிலையமர்த்தல் மற்றும் மீளாய்வு செயற்குழுக்கள் (Identification, Placement and Review Committees – IPRC) பாடசாலை தலைமையாசிரியர், ஒரு விசேட கல்வி ஆசிரியர் அல்லது திணைக்களத் தலைவர், மற்றும் ஒரு வகுப்பறை ஆசிரியர் போன்றவர்களைக் கொண்ட சிறிய அலுவலகர் குழுக்களை உள்ளடக்கின்றது. சிலவேளைகளில், வேறு அலுவலக நிபுணர்கள் (உதாரணமாக மனோதத்துவ நிபுணர் அல்லது பேச்சு-மொழி நோய்க்குறியியல் வல்லுநர்) ஒரு செயற்குழு சந்திப்பில் பங்குகொள்வார்கள். உங்களுடன் சேர்ந்துழைப்பதன் மூலம், உங்கள் பிள்ளையின் கல்வியிற்கான இயன்றளவு சிறந்த முடிவுகளை எடுப்பது செயற்குழுவின் குறிக்கோளாகும்.

### ஒரு மாணவரை செயற்குழுவிற்கு சிபாரிசு செய்வது யார்?

உங்கள் பிள்ளையின் பாடசாலை தலைமையாசிரியர் பரிந்துரை செய்துவிட்டு, உங்களிற்கு கடிதம் மூலம் தெரிவிப்பார். மாறாக, உங்கள் பிள்ளையின் கற்றல் தேவைகளில் அக்கறை கொண்டிருப்பின், நீங்கள் தலைமையாசிரியரிடம் பரிந்துரை செய்யுமாறு (கடிதம் மூலம்) கேட்கலாம். செயற்குழு சந்திப்பு இடம்பெற குறைந்தது 10 பாடசாலை நாட்களிற்கு முன்பு உங்களிற்கு அதனைப்பற்றி அறியத்தரப்படும். அந்த சந்திப்பிற்கு நீங்கள் வருகைதருவது முக்கியமாகும். உங்களிற்கு வருகைதர முடியாவிடின், வேறொரு திகதி அல்லது நேரத்தை ஒழுங்குபடுத்துவதற்கு தலைமையாசிரியருடன் தொடர்புகொள்ளுங்கள்.

**சந்திப்பிற்கு முன்னர் எவ்வித தகவல்களை செயற்குழு தயார்படுத்தும்?**

பாடசாலை மற்றும் மன்ற அலுவலர் உங்கள் பிள்ளையின் கற்றலைப்பற்றிய தகவல்களை சேகரிப்பார்கள். உங்கள் பிள்ளையின் தேவைகள் மற்றும் கற்றல் சாதனைகள் (வகுப்பறை மற்றும் விசேட கல்வி ஆசிரியர்களிடமிருந்து), தேவையான சுகாதார தகவல்கள், அத்துடன் முறையான மதிப்பீட்டு முடிவுகள் (உதாரணமாக மனோதத்துவ நிபுணர், பேச்சு-மொழி நோய்க்குறியியல் வல்லுநர் அல்லது தொழில்வழி சிகிச்சையாளர்) என்பனவற்றை இது உள்ளடக்கக்கூடும். எல்லா தகவல்களினதும் ஒரு பிரதியை நீங்கள் பெறுவீர்கள்.

**சந்திப்பிற்கு நீங்கள் எவ்வாறு தயார்செய்யலாம்?**

நீங்கள் இச்செய்முறையில் ஒரு சம பங்காளியாவீர்கள். செயற்குழுவின் சந்திப்பிற்கு முன்னதாக உங்கள் பிள்ளையின் ஆற்றல்கள் மற்றும் தேவைகளைப்பற்றி எழுத்துவடிவில் தகவல்களை நீங்கள் வழங்க விரும்பலாம். அத்துடன், விசேட கல்வி தேவைகள், திட்டங்கள் மற்றும் சேவைகள், நிலையமர்த்தல் தெரிவுகள், மற்றும் உங்கள் பிள்ளையின் ஆவணங்கள் என்பவை பற்றி நீங்கள் மேலதிகமாக அறிய விரும்பலாம். இவை பற்றி உங்கள் பாடசாலை தலைமையாசிரியருடன் பேசுங்கள்.

உங்கள் பிள்ளையின் வழக்குரைஞராக ஒருவரை நீங்கள் சந்திப்பிற்கு அழைத்துவரலாம். 16 வயதும் அதற்கு மேற்பட்டதுமான மாணவர்களும் வருகைதர அனுமதிக்கப்படுகின்றனர். செயற்குழுவுடன் ஆங்கிலத்தில் நீங்கள் பேச அசௌகரியப்பட்டால், ஒரு மொழிபெயர்த்துரைப்பாளரை கோரிக்கையின் நிமித்தம் நாம் வழங்குவோம்.

**செயற்குழு சந்திப்பின்பொழுது என்ன நடக்கும்?**

உங்கள் பிள்ளையின் ஆற்றல்கள் மற்றும் கற்றல் தேவைகள், விசேட கல்வி அவசியப்படுகின்றதா, அத்துடன் எத்தகையான நிலையமர்த்துதல் சிறந்தது என்பவற்றைப்பற்றி செயற்குழு மீளாய்வுசெய்து உரையாடும். நீங்கள் கேள்விகள் கேட்டு ஆலோசனையில் கலந்துகொள்ளவேண்டும்.

இந்த சந்திப்புகள் வழக்கமாக 20 நிமிடங்கள் நீடிக்கும். உங்கள் பிள்ளை விசேட கற்றல் தேவைகளைக் கொண்டவரா என்றும் அவரிற்கு விசேட கல்வி நிலையமர்த்துதல் தேவைப்படுகின்றதா என்றும் செயற்குழு அப்பொழுதே அதன் தீர்மானத்தை எடுக்கும். சிலவேளைகளில், செயற்குழுவிற்கு மேலதிக தகவல்கள் தேவைப்படுமானால் அதன் முடிவை தள்ளிப்போடுவதுடன், மற்றொரு சந்திப்பு ஒழுங்குசெய்யப்பட்டு, அதற்கு நீங்கள் வருகைதருமாறு அழைக்கப்படுவீர்கள்.

விசேட கல்வி தேவைப்பட்டால், விசேட கல்வி ஆதரவுடன் வழக்கமான வகுப்பறையில் அமர்வதே எப்பொழுதும் முதல் தெரிவாகும். அது பொருத்தமற்றதாயின், மற்றய தெரிவுகளில் உள்ளடங்குபவை, பாடசாலை நாளின் அரைவாசி வரை வழக்கமான வகுப்பறைக்கு அப்பாலிருத்தல், மற்றும் விசேட கல்வி வகுப்பொன்றிற்கு (உங்கள் வழக்கமான பாடசாலையில் அல்லது வேறொரு பாடசாலையில்) வருகைதருதல் என்பனவாகும்.

**செயற்குழு சந்தித்தபின்னர் நடைபெறுவது என்ன?**

செயற்குழுவின் தீர்மானத்தை விளக்கும் ஒரு கடிதத்தை நீங்கள் பெறுவீர்கள். நீங்கள் சந்திப்பில் பங்குபற்றவில்லையெனில், உங்கள் பாடசாலையின் தலைமையாசிரியர் தீர்மானத்தைப்பற்றி உங்களுடன் தொடர்புகொள்வார். செயற்குழு, விசேட கல்வி நிலையமர்த்துதலொன்றை சிபாரிசு செய்திருப்பின், ஒரு இசைவுப் பத்திரத்தில் கையொப்பமிடுமாறு நீங்கள் கோரப்படுவீர்கள்.

தயவுசெய்து, ஏதேனும் சந்தேகங்களிருப்பின் உங்கள் பிள்ளையின் தலைமையாசிரியருடன் கலந்துரையாடுங்கள். செயற்குழுவிடம் மீள்பரிசீலனை செய்யுமாறு (கடிதம் மூலம்) கோரிக்கைசெய்து, நீங்கள் இதன்பின்னரும் அத்தீர்மானத்திற்கு உடன்படவில்லையெனில் மேன்முறையீடு செய்யலாம். முதற்தடவையாக செயற்குழுவுடன் சந்தித்த 30 நாட்களிற்குள், பாடசாலை மன்றத்தின் கல்வி இயக்குநருக்கு உங்கள் மேன்முறையீட்டையும் அதற்கான காரணங்களையும் உணர்த்தும் கடிதமொன்றையும் அனுப்புங்கள்.

இசைவுப் பத்திரத்தில் நீங்கள் கையொப்பமிட்டு உங்கள் பிள்ளையின் பாடசாலைக்கு அதை மீள அனுப்பியபின், நாம் நிலையமர்த்துதலிற்குரிய ஏற்பாடுகளை செய்வோம்.

**ஒரு நிலையமர்த்துதலின் பின்னர், உங்கள் பிள்ளையின் தேவைகள் பூர்த்தியடைகின்றன என்பதை நீங்கள் எவ்வாறு அறிவீர்கள்?**

எந்தவோர் திட்டத்திலுள்ள எந்தவோர் பிள்ளையைப்போலும், தேர்ச்சி அறிக்கைகளை நீங்கள் பெறுவீர்கள்; அத்துடன் ஒழுங்குபடுத்தப்பட்ட பெற்றார்/ஆசிரியர் சந்திப்புகளின்போது அல்லது உங்கள் வேண்டுகோளின் நிமித்தம் வேறு வேளைகளின்போது ஆசிரியருடன் உரையாடலாம்.

ஒரு தனிப்பட்ட கல்வி திட்டத்தின் (Individual Education Plan) அபிவிருத்தியினூடாக உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்தில் நீங்கள் ஈடுபட்டிருப்பீர்கள். உங்கள் பிள்ளையின் விசேட கல்வி நிலையமா்த்தல் ஆரம்பித்து 30 நாட்களினுள் இது உருவாக்கப்படவேண்டும். இந்த திட்டம் உங்கள் பிள்ளையின் ஆர்வங்கள், ஆற்றல்கள், தேவைகள் மற்றும் இலக்குகள், ஆகியவற்றை வரையறுப்பதோடு, உங்கள் பிள்ளை வெற்றியெய்த அவசியமான விசேட கல்வி திட்டங்கள் அல்லது சேவைகளை வழங்குதலில் எமக்கு உதவுகின்றது.

உங்கள் பிள்ளையுடைய நிலையமா்த்தலின் மூன்று மாதகாலத்திற்குப் பின்னர், முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கென ஒரு தொடர் நடவடிக்கையான செயற்குழு சந்திப்பிற்கு நீங்கள் கோரிக்கை விடுக்கலாம். வருடத்திற்கு ஒரு தடவையாவது பாடசாலை உங்கள் பிள்ளையின் விசேட கல்வி தேவைகளை மீளாய்வு செய்தல் அவசியமாகும். உங்கள் பிள்ளையின் நிலையமர்த்தலில் அல்லது அமைவிடத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த நாம் விருப்பம் தெரிவித்தால் அல்லது நீங்கள் வேண்டியிருந்தால் வருடாந்த மீளாய்வு செயற்குழு சந்திப்பொன்றையும் நாம் நடாத்துவோம்.

**நீங்கள் எங்கு மேலதிக தகவல்களைப் பெறலாம்?**

அடையாளப்படுத்தல், நிலையமா்த்தல் மற்றும் மீளாய்வு செயற்குழு (Identification, Placement and Review Committee) மற்றும் விசேட கல்வியைப்பற்றி மேலுமறிவதற்கு, தயவுசெய்து:

- உங்கள் பிள்ளையின் ஆசிரியா் அல்லது தலைமையாசிரியரிடம் பேசுங்கள்.
- உங்கள் பிள்ளையின் பாடசாலையில் விசேட கல்வி ஆசிரியருடன் தொடர்புகொள்ளுங்கள்.
- பீல் பிராந்திய பாடசாலை மன்றம் (Peel District School Board) இணையதளத்திற்கு செல்லுங்கள், www.peelschools.org/speced
- ஒன்டேரியோ கல்வி அமைச்சு (Ontario Ministry of Education) இணையதளத்தினை www.edu.gov.on.ca இல் சந்தித்து, ஆரம்பநிலை (elementary) மற்றும் நடுத்தரநிலை (secondary) கல்வியில் கிலிக் செய்து, பின்பு விசேட கல்வி இணைப்புகளை (special education links) தொடருங்கள்.
- பீல் பிராந்திய பாடசாலை மன்றத்தை (Peel District School Board) 905-890-1099 அல்லது 1-800-668-1146 இணைப்பு 2345 இல் அழையுங்கள்.